Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 348

வியாழக்கிழமை 09 நவம்பர் 2023

ஐப்பசி 23 ஆம் நாள் – வள்ளுவர்



## சட்டவரைவுகள் நிறைவேற்றம்!

கொழும்பு, நவ.9
குடியியல் நடவடிக் கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்ட வரைவு மற்றும் ஊழல் எதிர்ப்புச் (திருத்தச்) சட்ட வரைவு என்பன நாடாளுமன்றத்தில் விவாதம் இன்றி நிறை வேற்றப்பட்டுள்ளன. நீதி, சிறைச் »11

## உதவிகள் வழங்குவதற்காக

# வடக்கு மாகாணத்தையும் சீனாவுடன் இணைப்போம்!

## மன்னாரில் தெரிவித்தார் இலங்கைக்கான சீனத் தூதுவர்

**மன்னார், நவம்பர் 9**

**வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணத்தை விடவும் பின்தங்கியிருக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்குக் காரணம் சீனாவின் ஒருமாநிலம் கிழக்கு மாகாணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சீனாவிலுள்ள குறித்த மாநிலத்தின் ஆளுநரும், மக்களும் இணைந்து இலங்கையின் கிழக்குக்கு உதவிகளை வழங்குகின்றனர். இதேபோன்று வடக்கு மாகாணத்தையும் சீனாவுடன் இணைத்து உதவுள்ளோம்.** »11

## மகனின் செயலால் மரணித்த தந்தை!

யாழ்., நவ.9
மகன் உயிரை மாய்க்க முயன்றார் என்ற தகவலை அறிந்த தந்தையின் உயிர் ஏக்கத்தில் பிரிந்துள்ளது. கோப்பாய் மத்தியைச் சேர்ந்த »09

## 'மகிழ்ச்சி'யால் வந்த குழப்பம்!

கொழும்பு, நவ.9
தங்களது கட்சியின் பெண் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்னவை இலக்கு வைத்து இராஜாங்க அமைச்சர் »09

# இந்தியாவுக்குப் போட்டியாக வடக்கில் குதிக்கிறதா சீனா?

## சாடுகின்றார் இராதாகிருஷ்ணன் எம்.பி.

கொழும்பு, நவ.9
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்தியா எதையும் செய்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில் சீனா செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. நெருக்கடியின்போது இந்தியாதான் உதவியது என்பதை இலங்கை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். »11

## தபால் சேவையும் அத்தியாவசியம்!

கொழும்பு, நவ.9
தபால் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று கையொப்பமிடப்பட்டது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலை »11

## தெல்லிப்பழையில் கொட்டியது மழை!

யாழ்ப்பாணம், நவ.9
வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக மழைவீழ்ச்சி கிடைத்துவரும் நிலையில், 24 மணி நேரத்தில் தெல்லிப்பழையில் அதி »09

### சிறிலங்கா கிரிக்கெட்

## ஆடுகளத்துக்கு வெளியே சூடுபிடிக்கின்றது ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ.9
விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தீர்க்கமானதொரு அரசியல் முடிவை எடுக்கத் தயாராகி வருகின்றார் என்று »11

## ஆள்களற்ற வீடுகளில் கை வைத்தவர் கைது

### நகைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 9
கோப்பாய் பொலிஸ் பிரிவில் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வீடுகளில் ஆள்கள் இல்லாத நேரங்களில் நகைகள் திருடப்பட்ட சம்பவங்களின் பிரதான சந்தேகநபர் கைது »11

## செய்வினை வெட்டுவதாக நூதனமாகப் பணமோசடி!

யாழ்ப்பாணம், நவ.9
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பணம் படைத்தவர்களிடம் நூதமான முறையில் பணத்தை ஏப்பமிடும் சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. »11

### கிரிக்கெட் நிறுவனத்தைக் கலைக்கும்

## கூட்டுப் பிரேரணை மீது மன்றில் இன்று விவாதம்

கொழும்பு, நவ.9
"ஊழல் மிக்க சிறிலங்கா கிரிக்கட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்" எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் »11

## 3 நாள்களாகக் குழுச் சண்டை மறியலில் வைத்தது மன்று!

யாழ்ப்பாணம், நவ.9
கோப்பாய் பகுதியில் 3 நாள்களாகத் தொடர்ச்சியாகக் குழுச் சண்டையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 23 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கோப்பாய் பகுதியில் இரு பகுதியினருக்கு »11



டிப்பர் வாகனமும், ஹன்ரர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் சாரதிகள் இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று உரும்பிராய் சந்திரோதயா பாடசாலைக்கு அருகில் நடந்துள்ளது. (அ-எ-26-20-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தபால் ஊழியர்கள் நேற்று வடக்கிலும் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

**தபால் ஊழியர்களின் நேற்றைய தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கின் பிரதான தபாலகங்கள் மூடப்பட்டன.**

நுவரெலியா தபாலகம் மிகவும் பழமை வாய்ந்தது. புராதனமான அந்த இடத்தை இந்தியாவைச் சேர்ந்த ஹோட்டலுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். போராட்டத்துக்கு வடக்கிலுள்ள தபால் பணியாளர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் வடக்கிலுள்ள தபாலகங்களும் மூடப்பட்டுள்ளன. மாதாந்த உதவிக் கொடுப்பனவு மற்றும் தபால் சேவைகளைப் பெற்றுக்கொள்ள தபாலகங்களுக்குச் சென்றோர் சிரமங்களை எதிர்கொண்டனர். (ஒ-இ)






# கண்பார்வையைக் காக்க நடைமுறைகளைப் பேணுக

### மருத்துவர் மலரவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

கண் பார்வை குறைவு ஏற்படுவதைத் தடுப்பதற்கு வாழ்க்கை நடைமுறைகளை இயலுமானவரை ஒழுங்காகப் பின்பற்றவேண்டும் என்று கண் சிகிச்சை மருத்துவ நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கண்பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

கண்ணில் பார்வைக்குறைவு ஏற்படுவதற்கு வெண்புரை, கண்ணாடி அணிதல், நீரிழிவு நோய், வயது காரணமாக வருகின்ற விழித்திரை நோய் ஆகியன பிரதான காரணமாக அமைகின்றன.

இந்தத் தாக்கங்களிலிருந்து விடுபட எங்களால் இயலுமானவரை வாழ்க்கை நடைமுறையை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும்.

முக்கியமாக உணவுப் பழக்கவழக்கங்களில் கூடுதலாக பழம், மரக்கறி வகைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு நாளாந்தம் சூரிய ஒளியின் அளவு கண்ணில் படுவதை குறைத்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவது மாணவர்கள் மற்றும் அனைவரும் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் (டிவைஸ்) நேரத்தைக் குறைக்கவேண்டும்.

இந்த மூன்று நடைமுறைகளையும் நீங்கள் பின்பற்றினாலேயே இனிவரும் காலங்களில் கண் சம்பந்தமான பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் - என்றார். (ச-இ)

# காணாமலாக்கப்பட்டோருக்கு என்னதான் நடந்தது?

### வெளிப்படுத்துமாறு கோரி உறவினர்கள் போராட்டம்

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்னதான் இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்தக்கோரி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

"காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் 2,450ஆவது நாளாக சுழற்சிமுறை போராட்டத்தை முன்னெடுக்கப்படும் கொட்டகைக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளைப் பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2,450 நாள் இன்றாகும். காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாம் எமது தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளிலும் மீன்பிடி நீரிடத்திலும் சீனாவின் அத்துமீறலை வன்மையாக எதிர்க்கிறோம்" - என்று போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்துள்ளனர். (ம-110)

# எதிர்காலத்தில் விலை குறைப்பு

### வஜிர நம்பிக்கை

கொழும்பு, நவ. 9

நாடு வங்குரோத்து அடைந்தபோது எரிவாயு லொறிகள் மற்றும் எரிபொருள் பவுஸர்களைக் கண்டவுடன் மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்த நிலை தோன்றியது. அரச அலுவலகங்களில் மின்சாரம் இன்றி அரச பொறிமுறை ஸ்தம்பித்தது. இப்போது அனைத்தும் கிடைக்கின்றன. ஆனால், விலை அதிகரித்துள்ளது. அதன் விலைகளைக் குறைக்க வேண்டியுள்ளது. எந்தவித சந்தேகமும் கொள்ளவேண்டாம்.

நான் அறிந்த இந்நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இறுதியில் எரிவாயு விலையையும் மின்சார விலையையும் குறைப்பார். தற்போதுள்ள பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். சம்பளத்தையும் அதிகரிப்பார் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி இவ்வாறு ஒரு முறைமையை நடைமுறைப்படுத்தும்போது, அரச தொழிற்சங்கங்கள் பழைய பழக்கத்தின்படி வேலைநிறுத்தம் செய்தால்தான், ஏதாவது இலாபம் கிடைக்கும் என்று நினைத்தால், அது தமக்குக் கிடைக்கப்போகும் வருமான வரியை இல்லாமலாக்கும் நடவடிக்கை ஆகும். அரச ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படுவது, நாட்டில் உள்ள ஏனைய பொதுமக்களின் வரி வருமானம் உட்பட சுற்றுலாப் பயணிகளால் கிடைக்கும் அந்நியச் செலாவணி போன்ற வருமானம் ஈட்டும் விடயங்களினாலாகும். இதுபோன்ற வேலைநிறுத்தங்கள் இந்த வருமான வரிகளைப் பாதிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட, நாம் கடன் பெற்றுள்ள நாடுகளின் கடன்களை மீளச்செலுத்த அவசியமான பொறிமுறைகளை உருவாக்கிக்கொண்டும், சில நாடுகளின் கடன்களை மீளச் செலுத்திக் கொண்டிருக்கும் நேரத்திலும் இவ்வாறான பழைய நடவடிக்கைகளின் மூலம் நாடு வீழ்ச்சியடையும். மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும். இந்த உண்மையை அறிந்தே அனைவரும் செயற்பட வேண்டும் - என்றார். (ஒ-26)

# கால்நடைகள் களவாடல்; வலிகாமத்தில் அதிகரிப்பு

கோப்பாய், நீர்வேலி உள்ளிட்ட பிரதேசங்களில் கால்நடைகள் திருட்டு அதிகரித்துள்ளன. இந்தப் பகுதிகளில் மேய்ச்சலுக்காக தரவை வெளிகளில் கட்டப்படும் கால்நடைகள் களவாடப்படுகின்றன.

கடந்த வாரம் கோப்பாயில் இரண்டு பெறுமதிமிக்க கால்நடைகள் காணாமற்போயுள்ளன.

அதிகாரிகள் கவனம்செலுத்தி கால்நடைகள் திருட்டைக் கட்டுப் படுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-17)

# கண்நோய் பாதிப்பு வீரியம் தணிகிறது!

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். குடாநாட்டுப் பிரதேசங்களில் கண்நோய் பரவலின் தாக்கம் குறைவடைந்து வருகின்றது என்று யாழ். சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கண்நோய் பரவலைத் தடுக்கும் முகமாக சுகாதாரப் பிரிவினரால் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுஇடங்கள், சந்தைகள், பாடசாலைகள், மக்கள் ஒன்றுகூடுமிடங்கள் ஆகியவற்றில் சுகாதாரப் பிரிவினரால் சுகாதார வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

இந்தநிலையில் தற்போது கண்நோய் பரவலின் தீவிரம் குறைவடைந்து வருகின்றது என்று சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டனர். (ச-17)

# நீதிபதிகளுக்கு வரிவிலக்கு: மனு தள்ளுபடி

கொழும்பு, நவ. 9

இலங்கை நீதிச்சேவைச்சங்கம், உயர்நீதிமன்ற நீதிபதிகள் சங்கம், தொழில் நீதிமன்ற தலைவர்கள் சங்கம் என்பன இணைந்து தமக்கு வரி விலக்கு அளிக்கப்படவேண்டும் என தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தமது கடமைகள் சுயாதீனமானவையாக இருப்பதால் அரசாங்க சம்பள நிர்ணய சபையின் பட்டியலில் தமது சேவை இடம்பெறமாட்டாது என மனுதாரர்கள் வாதிட்டனர்.

மனுவை பரிசீலித்த ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு வரி விதிப்பது அரசமைப்புடனும் சட்டத்துடனும் சம்பந்தப்பட்ட விடயம் எனவும் அரசமைப்பு மற்றும் சட்டத்துறை விடயங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது எனவும் தெரிவித்துள்ளது. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் வழக்கில் திருப்பம்

## படகின் உரிமையாளர் இல்லாத மீனவர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

**எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நால்வர் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய 22 மீனவர்களுக்கும் விளக்கமறியலை நீடித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 26 தமிழக மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

கடந்த மாதம் 14ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 3 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களில் ஒருவர் ஒரு படகின் உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டதை அடுத்து அந்தப் படகை பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிவான், அந்தப் படகில் பயணித்த உரிமையாளர் உள்ளிட்ட நால்வரையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரணச் சிறைத்தண்டனை விதித்து விடுதலை செய்து உத்தரவிட்டார். அத்துடன் ஏனைய 22 மீனவர்களுக்கும் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து நீதிவான் ஜே. கஜநிதிபாலன் உத்தரவிட்டார். இதுவரைகாலமும் எல்லை தாண்டும் மீனவர்களது வழக்கு விசாரணைகளின்போது படகு உரிமையாளர் தரப்பு தவிர்க்கப்பட்டு படகில் கைதானோரில் முதன்மையான நபரே முதலாம் இலக்க சந்தேகநபராக குறிப்பிடப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவது வழக்கம்.

இந்நிலையில், கைது நடவடிக்கையின்போது படகில் பிரசன்னமாகியிருக்காவிடினும், படகின் உரிமையாளர், வாடகைக்கு எடுத்து பயன்படுத்துபவர், தலைவர் ஆகிய மூவரில் ஒருவரை முதன்மைச் சந்தேகநபராக் குறிப்பிடவேண்டும் எனவும், அவ்வாறு முதன்மைச் சந்தேகநபராக குறிப்பிட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் குறித்தநபர் மன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்க வேண்டும் எனவும் சட்ட ஏற்பாடுகளில் உள்ள விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விசேடமாக வருகைதந்திருந்த அரச சட்டத்தரணி நா. நிசாந்தன் மன்றுரைத்தார்.

மீனவர்கள் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி இதனை மறுத்து, 2018ஆம் ஆண்டு முதலாம் இலக்க 15ஆம் பிரிவு வெளிநாட்டுப் படகுகளுக்கான சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு வலியுறுத்தப்படவில்லை என ஆட்சேபம் தெரிவித்தார்.

இதையடுத்து இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிவான் குறித்த விடயம் தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் வரை 22 மீனவர்களது விளக்கமறியலை வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-100)

## மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க அ. அட்டை

கொழும்பு, நவ. 9

விசேட தேவையுடையோர் வாக்களிப்பதற்கு வசதியாக தனியான அடையாள அட்டை வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த 5 வருடங்கள் முடிவதற்குள் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும். இந்த முன்னோடி திட்டத்துக்கு 10 மாவட்டங்களிலிருந்து 500 விசேட தேவையுடையோர் தேர்வு செய்யப்பட்டு, இந்த ஆண்டு 5 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## 500 குடும்பங்களுக்கு பொருண்மிய உதவி!

### *சீனத் தூதுவர் வழங்கினார்*

யாழ்ப்பாணம், நவ. 9

நயினாதீவுக்கு நேற்றுமுன்தினம் சென்ற சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் பொருளாதாரம் நலிவுற்ற 500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

தனது பயணத்தின் ஒரு புகுதியாக நயினாதீவு நாக விகாரையில் அவர்கள் வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். (ம-66)

## புத்தாக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொதுநூலகத்தின் டிஜிற்றல் அறிவு மையத்தால் நடத்தப்படும் புத்தாக்கக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 5 மணி வரை சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கண்காட்சி நாளைமறுதினம் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது. கண்காட்சியில் நூலக டிஜிற்றல் அறிவு மைய மாணவர்களின் வியப்பூட்டும் புத்தாக்கங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன. பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயனடையுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-66)

## 'அஸ்வெசும' சிக்கல்களைத் தீர்க்க அதிகாரிகள் நியமனம்

'அஸ்வெசும' நலன்புரி வேலைத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல ஒவ்வொரு பிரதேசங்களுக்குமான அதிகாரிகளை நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பிரதேச செயலர்கள் சங்கத்துடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தில் காணப்படும் தொழில்நுட்ப ரீதியான சிக்கல்களை நிவர்த்தி செய்து முன்னோக்கிக் கொண்டுச்செல்வதற்கு இவ்வாறு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## புதினம் தெரியுமோ?

நவம்பர் மாதமெண்டாலே எங்கட சனங்களுக்கு நினைவுக்கு வாறது மாவீரர் நாள்தான். முள்ளிவாய்க்கால் சண்டைக்குப் பிறகு ஆருமே மாவீரர் துயிலுமில்லங்களின்ர பக்கமே எட்டிப்பாக்க ஏலாமல் கிடந்தது. கார்த்திகை விளக்கீட்டுக்கு வீட்டுக்கு முன்னால பந்தம் கொளுத்தினால்கூட ஆமி அள்ளிக்கொண்டு போற காலம் அது. அப்பிடியிருந்தும் சில இடங்களில மாவீரர் நாளுக்கு தீபம் கட்டாயம் கொளுத்துப்படும். முக்கியமா கம்பஸில மாவீரர் நாளுக்கு தீபமேத்தாமல் பெடியள் இருந்ததேயில்லை. அதைமாதிரி சில மாவீரர் துயிலுமில்லங்களிலையும் தமிழ் உணர்வுள்ள சிலர் களவாப் போயெண்டாலும் தீபமேத்திப் போட்டு வந்த சம்பவங்களும் இருக்கு.

நல்லாட்சிக்காலத்தில இந்தக் குளிர் எல்லாரையும் விட்டுப் போட்டுது. அதுக்குப் பிறகு 'ஆர் மாவீரருக்கு தீபமேத்துறது?' எண்ட புதுப்பிரச்சினை கிளம்பிட்டுது. கிறவுட் கூடின பஸ்ஸில ஓடிப்போய் சீற் பிடிக்கிறமாதிரி, சில தமிழ்த் தேசியக் கட்சியள் ஆளையாள் மிதிச்சுக் கொண்டு ஒவ்வொரு மாவீரர் துயிலுமில்லத்தையும் தங்கட கொண்ட்ரோலுக்க கொண்டுவர கடும்பாடு படுவினம். முள்ளிவாய்க்கால், திலீபன் நினைவேந்தல் எண்டாத் தானே குறிப்பிட்ட ஒரு இடத்தில மட்டும் செய்யோனும். ஆனால் மாவீரர் நாள் அப்பிடியில்லத்தானே. எல்லா மாவட்டத்திலையும் மாவீரர் துயிலுமில்லம் இருக்கு. அதால இஞ்ச இடம் கிடைக்காட்டி மற்ற மாவட்டத்துக்கு ஓடிப்போயாவது அந்தத் துயிலுமில்லத்தை தங்கட கட்டுப்பாட்டுக்குள்ள உந்தத் தமிழ்த் தேசியக் கட்சிக்காரர் கொண்டந்திடுவினம். அப்பிடிச் செய்து செய்து இப்ப ஆர் ஆருக்கு எந்தெந்தத் துயிலுமில்லம் எண்டு ஒருமாதிரி பாகப்பிரிவினை செய்திட்டினம். சரி பிழைக்கப்பால இவையின்ர அரசியல் போட்டியால தான், எல்லா மாவீரர் துயிலுமில்லங்களிலையும் மாவீரர் நாள் சிறப்பா நடக்கிறது எண்டதையும் சொல்லத்தான் வேணும்.

இந்த வருசமும் தங்கட கட்டுப்பாட்டில இருக்கிற துயிலுமில்லங்களில இப்பவே தமிழ்த் தேசியக் கட்சியள் துப்புரவு செய்யத் தொடங்கிட்டினம். இனி அப்பிடியே மெல்ல மெல்ல ஒவ்வொரு வேலையாப் பாக்க மாவீரர் நாளும் வந்திடும். ஆனால் இப்ப இதுக்குள்ள புகுந்து குழப்பம் செய்யவெண்டு கொஞ்சப்பேர் வெளிக்கிட்டிருக்கினம். தங்களுக்கும் மாவீரர் நாளில உரிமை இருக்கெண்டமாதிரி வந்து, எல்லாத்தையும் கெடுத்து, அடிபிடியை உருவாக்கி, இனிமேல் மாவீரர் நாளே கொண்டாட முடியாதமாதிரி ஒரு நிலைமையை ஏற்படுத்துறதுதான் இவையின்ர திட்டம். அதுக்கான பிள்ளையார் சுழி கிளிநொச்சியில போடுப்பட்டிருக்கு. கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில தமிழரசுக்கட்சிதான் வழக்கமா மாவீரர்நாள் ஏற்பாடுகளையெல்லாம் செய்யிறது. இந்த முறையும் தமிழரசுக்கட்சிக்காரர் போய், சிரமதானமெல்லாம் தொடங்கிட்டினம். இப்ப என்னெண்டால் ஏற்கனவே தமிழரசுக் கட்சியில இருந்துட்டு 'வண்டில்' விடப் போன ஆக்களின்ர ஏவுதலோட, "கேடயத்துக்க 'போய் ஒளிச்சிருந்த சிலர்' எங்கட உடம்பிலையும் தமிழ் ரத்தம்தான் ஓடுது, நாங்களும் சிரமதானம் செய்வம், எங்களுக்கும் மாவீரர் துயிலுமில்லத்தில உரிமை இருக்கு" எண்டு மண்வெட்டி, பிக்கானோட இறங்கி, குப்பையே இல்லாத இடத்தில சிரமதானம் செய்யிறமாம் எண்டு படம் காட்டியிருக்கினம். சிரமதானத்திலேயே இப்பிடியெண்டால், மாவீரர்நாளுக்கு உந்த வானரப்படை என்னவெல்லாம் கூத்துக்காட்டப் போகுதோ எண்டதுதான் சனத்தின்ர கவலை.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் பரிசுக்குவியல்

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான இன்றைய (09.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

தினம் ஒரு பரிசு 36

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

நியூஸிலாந்து - இலங்கை

இடம் : பெங்களூர்
நேரம்: பி.ப. 2.00

NEW ZEALAND CRICKET

Sri Lanka Cricket

# இங்கிலாந்துக்கு வெற்றி



**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்தைத் தோற்கடித்து நீண்ட இடைவெளியின் பின்னர் ஒரு வெற்றியைப் பதிவுசெய்தது இங்கிலாந்து.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர் பேர்ஸ்ரவ் நேற்றும் தடுமாறினார். அவர் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் டேவிட் மலன் மற்றும் ரூட் இருவரும் இணைந்து நல்லதொரு இணைப்பாட்டத்தை அமைத்தனர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இங்கிலாந்து. ரூட் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மலன் மற்றும் ஸ்ரோக்ஸ் இருவரும் இணைந்து அற்புதமான ஆட்டத்தை வழங்கினார்கள். 87 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மலன். ஸ்ரோக்ஸ் அதிரடியாக விளையாடி சதம் கடந்தார். பின்வரிசையில் வோக்ஸ் அரைச்சதம் கடக்க 9 விக்கெட்களை இழந்து 339 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து.

பந்துவீச்சில் பஸ் டி லீட் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நெதர்லாந்து அணிக்கு, மக்ஸ் ஓ டோட் மற்றும் அகர்மர் இருவரும் முற்றாக ஏமாற்றினார்கள். சற்று நிதானித்த வெஸ்லி 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் ரெயா பெற்ற 41 ஓட்டங்கள்தான் நெதர்லாந்தின் சார்பில் அதிகபட்சம். முடிவில் அந்த அணி 179 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. 160 ஓட்டங்களால் இங்கிலாந்து வென்றது. மொய்ன் அலி, ஆதில் ரசிட் இருவரும் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்கள்.

இங்கிலாந்து அரையிறுதிக்குத் தகுதி பெறாவிட்டாலும் அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணியைத் தீர்மானிக்கவல்ல இடத்தில் உள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றால் பாகிஸ்தானின் அரையிறுதிக் கனவு கலைவதற்கே வாய்ப்புகள் அதிகம். (ம)

# பாகிஸ்தானா? நியூஸிலாந்தா?




உலகக்கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் இலங்கை - நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன. இன்றைய ஆட்டம், அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணிகளைத் தீர்மானிக்கும் ஆட்டமாக அமைந்துள்ளது. இன்றைய ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றால், அந்த அணி அரையிறுதிக்குத் தகுதிபெறுவதற்கான வாய்ப்புக்களைப் பிரகாசப்படுத்தும். மாறாக இலங்கை வெற்றிபெற்றால், பாகிஸ்தான் அரையிறுதிக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகும். இந்த நிலையிலேயே இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஆட்டமாக அமைந்துள்ளது. (ம)

## தினம் ஒரு பரிசு — நாள் 34 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| நி.சுபராம் | - ஓட்டுமடம் | அ.பவன் | - எழுத்தூர் |
| ந.அஹசியா | - அரியாலை மேற்கு | ப.பிரகாஷ் | - வேலணை |
| க.குணபாலன் | - அளவெட்டி | ஜி.நித்தேஷ் | - வேலணை |
| சி.மகாலட்சுமி | - கொக்குவில் மேற்கு | எஸ்.கே.எம்.சங்கீதா | - புதுக்குடியிருப்பு |
| ந.விஜயகுமாரன் | - காளிகோவிலடி | ஜி.ஜான்சன் | - ஆனந்தபுரம் |
| கி.கிரிஷாந் | - வவுனியா | வி.நிவர்சன் | - பொக்கணை |
| த.றக்ஷனா | - மீசாலை | கா.கார்த்திகா | - வவுனியா |
| [illegible] | - யாழ்ப்பாணம் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆசியாவின் அசூசை!

இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் சூறாவளி சுழன்றடிக்கத் தலைப்பட்டிருக்கின்றது. உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி படுமோசமான தோல்வியடைந்ததை அடுத்து, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான், இலங்கை கிரிக்கெட் சபையை கூண்டோடு பதவி விலக்கி, உலகக்கிண்ணத்தை வென்றுதந்த தலைவரான அர்ஜூன ரணதுங்க தலைமையில் புதியதொரு இடைக்காலக் குழுவை நியமித்திருந்தார். கிரிக்கெட் சபையின் முன்னாள் அதிகாரிகள் இடைக்காலக் குழுவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடிய நிலையில், அந்தக் குழுவுக்கு 14 நாள்கள் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதையடுத்து, இலங்கை கிரிக்கெட் சபையினரை, மோசடிக்காரர்கள், ஊழல்வாதிகள் என்று பகிரங்கப்படுத்தியிருக்கின்றார் ரொஷான் ரணசிங்க. மட்டுமல்லாமல், இடைக்காலக் குழுவை நீக்குமாறு ஜனாதிபதி வழங்கிய அழுத்தம் மற்றும் மிரட்டலையும் அவர் 'புட்டுப்புட்டு'வைத்திருக்கின்றார்.

உலகில் பெரிதும் அறியப்படாத கொசோவோ என்ற நாட்டை சர்வதேச அரங்குக்கு அறிமுகப்படுத்தியது ஓர் ஒலிம்பிக் பதக்கம்தான். 2016ஆம் ஆண்டு பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் தொடரின்போது மஜ்லிண்டா கெல்மன்டி என்ற வீராங்கனை மல்யுத்தத்தில் வென்ற தங்கப்பதக்கமே கொசோவோவை உலகில் பேசவைத்தது. அதுபோன்றுதான், 1996ஆம் ஆண்டு இலங்கை கைப்பற்றிய கிரிக்கெட் உலகக்கிண்ணம் இந்தத் தீவுக்கு ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தது. அன்றுமுதல் இலங்கை அவ்வப்போது சில சரிவுகளையும் பின்னடைவுகளையும் சந்தித்தாலும் அதலபாதாளத்தில் வீழ்ந்துவிடவில்லை. ஆனால், இப்போது, தன் அங்கீகாரத்தை இழந்து – அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது இலங்கைக் கிரிக்கெட். ஒரு பசியமரத்தை மெல்ல ஆக்கிரமித்து அதை இரையாக்கும் கறையான்போன்று ஊழல் இந்தத் தீவை மட்டுமல்ல இந்த நாட்டின் கிரிக்கெட்டையும் சேர்த்தே சீரழித்தது – சீரழித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், இதிலிருந்து விடுபடுவதற்குரிய எந்தவொரு வாய்ப்பும் சாத்தியப்பாடுகளும் இருப்பதாகத் தெரியவேயில்லை. கிரிக்கெட் சபையைச் சீரமைப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட எத்தனங்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களும், இந்த அழுத்தம் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துகளும்கூட அதைத்தான் மெய்ப்பிக்கின்றன.

இதேவேளை– ஊழல்மட்டுமாஇலங்கைக்கிரிக்கெட்டை இல்லாமலாக்கிக் கொண்டிருக்கின்றது என்று கேட்டால் அதற்குரிய பதில் இல்லையென்பதே. எத்தனையோ திறமையான வீரர்கள் இருந்தாலும், தெற்கில் ஓரிரு மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்களே அணிக்குள் உள்வாங்கப்படுகின்றனர். கொழும்பிலுள்ள சில பாடசாலைகளில் கற்றிருந்தால் இலங்கைக் கிரிக்கெட் அணிக்குள் இலகுவில் இணையலாம் என்பதுதான் இங்கு கூடுதல் தகைமை. இவ்வாறிருக்கையில், எவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் பலம்பெறும்? எவ்வாறு அது கட்டமைக்கப்படும்?

இலங்கைக் கிரிக்கெட் அணியைப் பலப்படுத்தும், மீளமைக்கும் உயர்மட்டக் கலந்துரையாடலொன்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. சங்கக்கார, மஹேல, ரணதுங்க என பெரும் தலைகள் அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இதன்போது, இலங்கைக் கிரிக்கெட் பலம்பெறவேண்டுமாயின் அணித்தெரிவு பரந்துபட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். வடக்கு – கிழக்கில் திறமையான வீரர்கள் உள்ளனர். அவர்கள் அணிக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்று சங்கா வலியுறுத்தியிருந்தார். ஆனால், வெறும் கண்துடைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட அந்தக் கலந்துரையாடலின் பரிந்துரைகள் எவையும் செவிமடுக்கப்படவில்லை– நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கிரிக்கெட் சபைக்குள் நிலவும் ஊழலை ஒழிக்காமல், அணித்தெரிவைப் பரவலாக்காமல், வடக்கு – கிழக்கு மாகாண வீரர்களுக்கு கடினப்பந்து ஆடுகள வசதிகளை ஏற்படுத்தாமல் கண்துடைப்புக்காகவும், எதிர்ப்பைச் சமாளிப்பதற்காகவும் ஏற்படுத்தும் மாற்றங்கள் ஒருபோதும் நிலையான தீர்வைத் தராது. ஒருகாலத்தில் ஆசியாவின் அடையாளமாக இருந்த இலங்கை அணி, இன்று ஆசியாவின் அசூசையாக மாறியிருக்கின்றது என்றால் அதற்கு இந்த மெத்தனப்போக்கும் ஒரு காரணம்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."

-மூப்பர் அப்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)






# கிரிக்கெட் வீரர்களுக்கு வரிவிலக்கு ஏன்?

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வி

**கொழும்பு, நவ. 9**

**கிரிக்கெட் வீரர்களின் சம்பளத்துக்கு வரிவிலக்கு அளித்தமைக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலர் மருத்துவர் சமில் விஜயசிங்க ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

கூடுதலான வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் தமக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கும்படி கோரிக்கை விடுத்தபோது எவருக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் கூறியது.

இப்போது கிரிக்கெட் வீரர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ளது. இது எப்படிச் சாத்தியம் என இறைவரித் திணைக்களம் விளக்கமளிக்கவேண்டும் - என்றார். (ஒ-6)

# மெய்நிகர் காப்புச்சட்டத்துக்கு சாதாரண பெரும்பான்மைபோதும்

மெய்நிகர் காப்புச்சட்டம் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படலாம் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

எனினும் குறிப்பிட்ட சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு விசேட பெரும்பான்மை தேவை எனவும் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு தெரிவித்துள்ளது. இந்த குறிப்பிட்ட சில பிரிவுகளில் திருத்தம் செய்யப்பட்டால் சாதாரண நாடாளுமன்ற பெரும்பான்மையுடன் மெய்நிகர் காப்புச்சட்டம் நிறைவேற்றப்படலாம் எனவும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் தெரிவித்துள்ளது.

சட்டவரைவின் விதிகளை தாங்கள் ஆய்வு செய்துள்ளதாகவும், தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட பிரிவுகளைத் தவிர மற்றைய பிரிவுகள் அரசமைப்புக்கு முரணாகக் காணப்படவில்லை எனவும் தாங்கள் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் திருத்தம் செய்யப்படும் பட்சத்தில் சாதாரண நாடாளுமன்ற பெரும்பான்மையுடன் மெய்நிகர் காப்புச்சட்டத்தை நிறைவேற்றலாம் என உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் தெரிவித்துள்ளது. (ம-6)

**நாளை** 10.11.2023 வெள்ளிக்கிழமை ஐப்பசி 24

சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05
பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடலங்களை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், நவ. 9
உரிமை கோரப்படாத 3 சடலங்களை அடையாளம் காட்டி உரியவர்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.எஸ்.யமுனாநந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

22ஆம்திகதி விடுதி இலக்கம் 34 இல் இறந்த பெயர், வயது, இடம் தெரியாத பெண்ணின் சடலமும் 24ஆம் திகதி தெல்லிப்பழை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட திருமதி ரு.கிருசாந்தன் என்ற பெண்ணின் சடலமும் செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி விடுதி இலக்கம் 8இல் இறந்த நல்லூராஜ் (வயது-63), சின்னக்கடையில் வசிக்கும் ஒருவரின் சடலமும் யாழ்.போதனா மருத்துவமனையில் இதுவரை யாரும் உரிமை கோரப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (ய)

## வாகன இலக்கப் பட்டியல் மக்கள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ். மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வாகன இலக்கத்தகடுகள் தொடர்பாக பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொது மக்கள் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டது.

இது குறித்து மேலதிகமான தகவல்களை மாவட்டச் செயலக இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

இதற்கமைவாக புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை, வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஓட்டும் தாள் போன்றவற்றை யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமர்ப்பித்து வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களப் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ரி)

## முருங்கைக்காய் சிடுகிடு விலையுயர்வு

சந்தைகளில் முருங்கைக்காயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த கோடைகாலத்தில் சந்தைகளில் முருங்கைக்காய் விலையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. அதனால் முருங்கை உற்பத்தியாளர்கள் பெரும் நட்டமடைந்தனர். இந்நிலையில் கடந்த மாதம் கிலோ 80 ரூபாவாக வரை விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்போது சடுதியாக கிலோ 300 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. (ச-9-17)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.9
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் சட்டமாணி சிறப்புப் பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் www.ou.ac.lk என்ற இணையத் தளத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ய)

★ ★ ★

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் www.ou.ac.lk என்ற இணையத் தளத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற 0212223374 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்என உதவிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ய)



## குருதிக்கொடை இன்று!

யாழ்ப்பாணம், நவ. 9
ஊர்காவற்றுறை பிரதேச செயலக அலுவலகத்தில் இன்று குருதிக்கொடை முகாமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை மருத்துவமனையின் ஏற்பாட்டில் காலை 9 மணிமுதல் முன்னெடுக்கப்படும் இந்தக் குருதிக்கொடையில் ஆர்வமுடையவர்கள் பங்குபற்றி குருதித்தட்டுப்பாட்டை நிவர்த்திக்க ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம)

## வளவாளர்கள் இணைப்பு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.9
பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடக சங்கீதம், பரதம், சித்திரம், மிருதங்கம், யோகாசனம், சிங்களம் ஆகிய கற்கைநெறிகளை எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது. எனவே மேற்குறித்த பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள் தங்களது சுயவிவரங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னதாக "நிலையப் பொறுப்பதிகாரி கலாசார மத்திய நிலையம், புற்றளை, புலோலி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி தி.சுகிர்தன் கேட்டுக் கொண்டுள்ளார். மேலதிக தொடர்புகளுக்கு 0777531791 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளமுடியும். (ய)

யாழ்ப்பாணம், நவ.9
சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் சங்கீதம், நடனம், சித்திரம், ஆங்கிலம், நாடகம், மிருதங்கம் ஆகிய கற்கை நெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மேற் கொண்டுள்ளது.

எனவே மேற்குறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள் தங்களது சுயவிபரங்களை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னதாக "நிலையப்பொறுப்பதிகாரி கலாசாரமத்திய நிலையம், ஐயனார் கோயிலடி, வடலியடைப்பு, சண்டிலிப்பாய்" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நிலையப்பொறுப்பதிகாரி எஸ்.லதீபன் கேட்டுக் கொண்டுள்ளார். மேலதிகதொடர்புகளுக்கு 0773198446 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ள முடியும். (ய)

## சட்டத்தின் ஆட்சி அறிவூட்டல் திருமலையில் செயலமர்வு

திருகோணமலை, நவ. 9
சட்டத்தின் ஆட்சி தொடர்பில் 'ஊழலும் மக்கள் பிரச்சினைகளும்' என்ற தொனிப்பொருளில் அறிவூட்டல் செயலமர்வு மூன்று தினங்கள் திருகோணமலையில் இடம்பெற்றது.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலுடன் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு இந்தச் செயலமர்வு இடம்பெற்றது. ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ ஹொங்கொங் நாட்டிலிருந்து இணைய காணொலியூடாக வளவாளராகப் பங்கேற்று கருத்துரையாற்றினார். நிகழ்வை சட்டத்தின் ஆட்சிக்கான மன்றத்தின் பணிப்பாளர் இவோன் கருணாரத்தின நெறிப்படுத்தினார். (ச-50)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் உண்டாகும். தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் நன்மை ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மாலையில் உறவினர்கள், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கடற்பரப்பில் சீனா கடும் ஆதிக்கம்!

## தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் இந்தியாவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

**இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் சீனாவின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், அதைத் தடுக்கவேண்டும் என்றும், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடைசெய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் ஈழ மீனவர் கள் இந்தியாவிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.**

இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இரண்டு நாள்கள் பயணமாக இலங்கைக்கு வந்திருந்தார். அவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களுக்குச் சென்று பல தரப்பினரையும் சந்தித்தார். இவ்வாறான தொரு பின்னணியில் செய்தியாளர் சந்திப்பில் மீனவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் கடற்றொழில் திணைக் களத்தால் எங்களுடைய வளங்களும், வாழ்வாதாரங்களும், சீனாவுக்கு விற்கப்பட்டு வருகின்றன. இதனால் எங்களுடைய இருப்பே கேள்விக்குறியாகின்ற நிலையேற்பட்டுள்ளது. இலங்கையின் கடற்றொழில் திணைக்களமும், சீனாவும் சேர்ந்து வடக்கு கடற்றொழிலாளர்களை கடலை விட்டு அந்நியப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதனால் இலங்கையின் வடக்குக் கடலில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

எங்களுடைய பகுதியிலே கிடைக்கின்ற [illegible]தச் சத்துடைய மீனை அல்லது கடலுணவுகளைப் பிடித்து எங்களுடைய மக்களுக்கு வழங்கமுடியாத சூழ்நிலை களை ஏற்படுத்திவிட்டு, சீன நாட்டு கடலட்டைப் பண்ணைகளை அமைத்து அங்கு கடலட்டைகளை உற்பத்தியாக்கி அதை சீன நாட்டில் இருப்பவர்களுக்கு உணவாகக் கொண்டு செல்வதற்கு முயற்சி எடுக்கின்றார்கள்.

எனினும், சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி எங்களுடைய கடலில் நாங்கள் இறைமையுடன் வாழ்ந்து தொழில் செய்வதற்கு எங்களது வாழ்வாதாரத்தை கொண்டுசெல்வதற்கு இந்தியா தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், இந்திய மீனவர்களின் இழுவைமடிகளால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுவரும் நிலையில், இந்த அத்துமீறல்களைத் தடுக்கவும் இந்திய அரசாங்கம் ஆத்மார்த்தமாகச்செயற்படவேண்டும் - என்றனர். (ம-26-100)

# கிளிநொச்சியில் கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி, நவ.9

இரணைமடு, கனகாம்பிகைக்குளப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 47 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு வீடொன்று சோதனைக்குள்ளாக்கப்பட்டது. அதன்போதே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-113)

# வடக்கின் 401 அதிபர்களும் அடுத்தவாரம் பதவியேற்பு

யாழ்ப்பாணம், நவ. 9

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 401 அதிபர்களும் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை தத்தமது பிரிவு வலயக் கல்வி பணியகங்களில் பதவியேற்கவுள்ளனர்.

பயிற்சி வகுப்புகளின் பின்னர் அவர்கள் பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து 15 ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை தரம் III க்கு அதிபர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-9)

# தீபாவளியை முன்னிட்டு விற்பனைச் சந்தை

யாழ்ப்பாணம், நவ.9

தீபாவளியை முன்னிட்டுச் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும்2023 நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-66)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



கடந்த 2023.10.12 அன்று இறைபாதமடைந்த நெடுந்தீவை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர்

**அமரர் முருகப்பர் சண்முகநாதன்**

**(முன்னாள் கிளை முகாமையாளர்-ஒட்டிசுட்டான் கூட்டுறவுச் சங்கம்)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (2023.11.09) காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (2023.11.11) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.303, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

(OE 40966) A-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 12 . 1951



மறைவு 07 . 11 . 2023

**முத்துத்தம்பி விவேகானந்தம் (தவம்)**

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி விவேகானந்தம் (தவம்) அவர்கள் கடந்த (07.11.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், தவமணி தேவியின் அன்புக் கணவரும் சதீஸ்குமார் (கனடா), ஜெயக்குமார், கேசவதர்சினி, யாழினி, லக்ஸ்சியா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தா (கனடா), கலையானந்தம் (கலை), லவன் (கோபி), கௌரீஸ்வரன் (கௌரி - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேனுகாந் (கனடா), ரெனிக்கா (கனடா), அக்ஷயன், அக்ஷரா, யக்ஷரா (அவுஸ்திரேலியா) நிகலன் (அவுஸ்திரேலியா), கவிசாயினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 539 5068

(CS 26882) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் புவேந்திரா இராஜக்கோன்**

(அரசாங்க மருந்தாளர்)

மலர்வு 01.09.1941 உதிர்வு 09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே !
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்.

குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் முன்பாக
ஏழாலை வடக்கு, ஏழாலை.

# நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்
## பாரவூர்திகள் பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான 24ஸ்ரீ 9364 மற்றும் 26ஸ்ரீ 5071 இலக்க **IZUZU** ரக பாரவூர்திகள் பகிரங்க ஏலத்தில் 15.11.2023 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இருபாலை வீதியில் உள்ள விவசாயப் பண்ணையில் இடம்பெற உள்ளது. லொறியினை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பார்வையிடலாம்.

**தலைவர்,**
**நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.**
தொலைபேசி இல: **021 22 22 143**

(CR 40965)A-1

# பெயர்மாற்றம்

தேரோவில் மத்தி. தேரோவிலில் வசிக்கும் **தம்பையா ஜெகஈஸ்வரி** ஆகிய நான் எனது பெயரை **தம்பையா ஜெகதீஸ்வரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தம்பையா ஜெகதீஸ்வரி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோஷலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS25675) (Ak.1) தம்பையா ஜெகதீஸ்வரி

# ஆட்கள் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கி வரும் எண்ணை உற்பத்தி தொழிற்சாலையான **Venkadeshwara Agro Industry (PVT) Ltd** யில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

கணக்காளர் (பெண்)
ஆய்வக உதவியாளர் (பெண்)

ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை **suganthon@gmail.com** எனும் மின்னஞ்சலுக்கு சமர்பிக்கவும்.

# வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம்றோட்டில் 4 அறைகளுடன் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

**077 458 0438**

# நினைவு வணக்க நிகழ்வு அழைப்பு

21.09.2023 வியாழக்கிழமை கனடாவில்
இறைபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம்



அமரர்
**கார்த்திகேசு நாகலிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் நினைவு வணக்க நிகழ்வு 11.11.2023 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத்தொடர்ந்து நடைபெற வுள்ள மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**இல.111,D10,**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

(cr.40935) (N.1)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்






திருமதி
**சுபந்தினி இரகுராகவன்**
(Dip.in. Teach, B.A, PGDE)

திருமதி
**சர்மினி குகச்சந்திரன்**
(Dip.in. Teach, B.A, PGDE)

**இலங்கை அதிபர் சேவை தரம் III நியமனத்தை 04.11.2023 அன்று பெற்ற** எமது பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் : **ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

# 31ம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 12 . 09 . 1972
மறைவு 10 . 10 . 2023

அமரர்
**அன்ரனி சூசைதாசன் பிலிப் இராஜசிங்கம்**

எமது சகோதரன் அன்ரனி சூசைதாசன்-பிலிப் இராஜசிங்கம் இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில் அவருடைய மாதாந்த சிகிச்சைகளின் போது அவரை இன்முகத்துடன் ஆதரித்து அளப்பரிய சேவையாற்றிய மந்திகை அரசினர் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு 09.11.2023 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கோரியடி, பருத்தித்துறை.**

தகவல் : **குடும்பத்தினர்**

# பெறுகை அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு
## தனியார் பாதுகாப்புச் சேவை - 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** தொலை பேசி:- 024-3243542, 0212290001 **தொலைநகல்:** 0212290001 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 09.11.2023 வரை காலை 09.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப் பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 09.11.2023ம் திகதியிலிருந்து 23.11.2023 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 23.11.2023 ம் திகதி மாலை 02.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக் கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.
6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் | தேவையான ஆளணி எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இரவு | பகல் |
| 1 | NP/14/44(1)/02/03/Sec.Ser/2023 | பாதுகாப்பு சேவை | 1 வருடம் | 10,000.00 | 23.11.2023 07.03.2024 | 02 | 02 |

**09.11.2023**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.**

(cr 39908) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்பாயும் பேராறு பொதுமக்கள் அவதானம்

வவுனியா, நவ.9

அதிக மழைவீழ்ச்சி மற்றும் அதிக நீர் வரத்து காரணமாக வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக வான் பாய்ந்து வருவதால் கீழ்ப்பகுதியில் வசித்துவரும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (எ-75)

கிளிநொச்சி, மலையாளபுரத்தைச்சேர்ந்த மாவீரர் குடும்பங்கள், போராளி குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளடங்கலாகத் தெரிவுசெய்யப்பட்ட 8 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும், தெரிவுசெய்யப்பட்ட 8 மாணவர்களுக்கு புத்தகப்பை, அப்பியாசக்கொப்பிகள் என்பனவும் அண்மையில் வழங்கப்பட்டன. லண்டனிலுள்ளபுலம்பெயர்உறவொன்றின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (எ-217)





'வாழ்க்கை தொடர்பான சரியான தீர்மானத்தை எடுத்தல்' எனும் தொனிப்பொருளில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வளவாளர்களாகப் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர். (ச-66)

# மாணவர் நாடாளுமன்றம் யாழ். வலயத்தில் இன்று

யாழ்ப்பாணம் வலயக்கல்வி மாணவர் நாடாளுமன்ற அமர்வு இன்று வியாழக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த அமர்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி. யோன் குயின்ரஸ் பங்கேற்கவுள்ளார். நிகழ்வில் கொடியேற்றம், வலய மாணவர் நாடாளுமன்ற அமர்வு, சான்றிதழ் வழங்கல் உள்ளிட்டவை இடம்பெற்று வலய கீதத்துடன் நிறைவு பெறவுள்ளது என்று யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (ச)



யாழ்ப்பாணம், சாபி நகர் குடியிருப்பில் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையின் பிரதான ஆலோசகர் அருட்கலாநிதி நடராசா சுபாஸ் தலைமையில் வாணிவிழா கலைநிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் யாழ்.மாநகராட்சி மன்ற உறுப்பினர் கலாபூஷணம் என்.எம்.பாலச்சந்திரன், காந்தீயம் பத்திரிகை ஆசிரியரும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, சார்ள்ஸ் ரோமியோ நற்பணிமன்றப் பணிப்பாளர் நிர்மலன், சண்டிலிப்பாய் பிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.டுபின்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)

## தெல்லிப்பழையில்...

கூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் நேற்றுக் காலை 8.30 மணிவரையான 24 மணி நேரத்தில் தெல்லிப்பழையில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக 101.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இதே காலப்பகுதியில் அச்சுவேலியில் 53.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 40.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 30.6 மழை வீழ்ச்சியும், இரணைமடுவில் 45.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், கிளிநொச்சியில் 43.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஆனையிறவில் 37.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-66)

## 'மகிழ்ச்சி'யால்...

அசோக்க பிரியந்த, இரட்டை அர்த்த வசனத்தைப் பயன்படுத்தினார் என்று நாடாளுமன்றத்தை நேற்று அதகளப்படுத்தியது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் கூடியது.

பிரதமரிடம் நேரடியாகக் கேள்வி எழுப்பி பதிலை பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்வி - பதில் நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, ஓய்வூதியம் பெறுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அதற்குப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார். அந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. பிரதமர் பொய்யுரைக்கின்றார் என ரோஹினி கவிரத்ன சுட்டிக்காட்டினார். அதையடுத்து ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரோஹினி கவிரத்னவுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

ரோஹினி கவிரத்னவால் எழுப்பப்பட்ட இடையீட்டுக் கேள்விக்கு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த பதிலளித்தார்.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு என அறிவிக்க முடிந்த உங்களுக்கு பாதீட்டில் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்படுமா என குறிப்பிட முடியாமல் இருப்பது கவலையளிக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன குறிப்பிட்டார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர், "ரோஹினி குமாரி எம்.பி.யை எவ்வாறு மகிழ்ச்சிப்படுத்துவது என்பது எனக்குத் தெரியாது. அவரை வேறு விதத்தில் மகிழ்ச்சிப்படுத்த யாராவது இருந்தால் அதைச் செய்து கொள்ளமுடியும். பிரதமரும், நானும், அமைச்சினால் எழுத்து மூலம் வழங்கப்படும் பதிலையே வழங்க முடியும்" -என்றார்.

இராஜாங்க அமைச்சரின் இந்தப் பதிலைக் கேட்டதும் ஐக்கிய மக்கள் சக்தியினர் கொதித்தெழுந்தனர். பெண் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அகௌரவத்தை ஏற்படுத்தும் விதத்திலும், அவதூறு பரப்பும் வகையிலும், சபைக்கு பொருத்தமற்ற விதத்திலும் இராஜாங்க அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஹன்சார்ட்டில் இருந்து அவர் கூறியதை அகற்ற வேண்டும். இராஜாங்க அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி பிரதம கொறடா மற்றும் எதிரணி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

பிரதி சபாநாயகருடனும் வாதிட்டனர். இராஜாங்க அமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் வலியுறுத்தினர். நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்க அவருக்குத் தடை விதிக்கவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதனால் சபையில் பெரும் கூச்சல் ஏற்பட்டது. இதன்போது இராஜாங்க அமைச்சரை நோக்கிப் பிரதி சபாநாயகர், " இந்த வார்த்தையை எந்த நோக்கில் பயன்படுத்தினீர்கள் என்று உங்களால் விளக்கமளிக்க முடியுமா?" எனக் கேட்டார். அதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், "நான் தவறான கோணத்தில் எதையும் குறிப்பிடவில்லை" - என்றார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினிக்கு அநீதி ஏற்பட்டிருந்தால் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். நாடாளுமன்றத்துக்கு பொருத்தமில்லாத வார்த்தைகளை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன். இது தொடர்பாக சபாநாயகருக்கும் அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்து சபைக்கு அறிவிக்கிறேன்" என்றும் பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார். (அ-எ-44)

## மகனின்...

முத்துத்தம்பி விவேகானந்தன் (வயது - 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தன் மகன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயற்சித்தார் என்ற தகவலைக் கேட்ட இவர் வீட்டில் மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார் என்று இறப்பு விசாரணைகளில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இதேவேளை - தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முயன்றாதாகக் கூறப்படும் அவரது மகன் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலகத்தில் முதியோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் கஜந்தன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் மூத்தோர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-78-19)



மட்டுவில், வில்சன் சனசமூக நிலையத்தின் வாணி விழா அண்மையில் நிலையத் தலைவர் ஜெகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச)



பச்சிலைப்பள்ளி பிரதேச சிறுவர் சபை அங்கத்தவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் பிரகாஷ் வளவாளராகப் பங்கேற்று பயிற்சியளித்தார். (ச-ரி-9)

# சுற்றுலாவிகளைக் கவர்வதற்கு கசூரினாவில் மேலுமொரு படகு



யாழ்ப்பாணம், நவ. 9

சுற்றுலாப் பயணிகளைக் கடற்பகுதியில் அழைத்துச் சென்று கடல்சார் இயற்கைச் சூழலைக் காண்பிக்கும் வகையிலான மேலுமொரு படகுச் சேவை கசூரினாக் கடற்கரையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தப் புதிய படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேசசபையின் செயலர் கி.விஜயேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டு குறித்த படகுச் சேவையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இதேவேளை - கசூரினா சுற்றுலாக் கடற்கரையில் இதுவரை 4 படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் படகு ஐந்தாவதாக இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-66)




# 'சரிகமப' ஈழப் போட்டியாளருக்கு யாழ்.வர்த்தகர்கள் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

இந்தியாவின் 'சரிகமப' நிகழ்ச்சியில் போட்டியாளர்களாகப் பங்கேற்றுள்ள தாயகத்தைச் சேர்ந்த இரண்டு சிறுமிகளின் திறமையை ஊக்குவிக்கும் வகையில் யாழ்.வர்த்தகர்கள் நிதியுதவி அளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மலையகத்தைச் சேர்ந்த கில்மிஷா மற்றும் அஷானி ஆகியோருக்கே இந்த நிதியுதவி 'சரிகமப' மேடையில் வைத்து கையளிக்கப்பட்டது.

'ஜவ்னாவின் சுவீற்' உரிமையாளரான நல்லூரைச் சேர்ந்த சுதன், அசானி, கில்மிசா இருவருக்கும் தலா இரண்டு இலட்சம் ரூபாவை வழங்கினார்.

தியாகி அறக்கொடை நிறுவுநரான தியாகராஜா அசானிக்கு 10 இலட்சம் ரூபாவும் கில்மிஷாவுக்கு 5 இலட்சம் ரூபாவும் கையளித்ததுடன் போட்டியில் பங்குபற்றிய தமிழகத்தைச் சேர்ந்த மேலும் சில போட்டியாளர்களுக்குமாக மொத்தமாக 3 மில்லியன் ரூபாவை வழங்கினார். (ச-27)

# நத்தாரையொட்டி குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 9

நத்தார் பண்டிகையை முன்னிட்டுச் சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. குருதிக்கொடை முகாமில் சுமார் 30க்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். (ச-66)



# நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 9

நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/112, திருநெல்வேலி தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவினது முதியோர் நலன்புரிச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த மாதம் 10ஆம் திகதி இடம்பெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவர் இ.இரத்தினசிங்கம், உப தலைவர் தி.ஸ்ரீஸ்கந்தராசா, செயலாளர் சி.அமிர்தலிங்கம், உப செயலாளர் பே.சுகுமார், பொருளாளர் த.தனபாலசிங்கம் ஆகியோர் உட்பட ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ய)

# சுற்றுலாச்சேவை வளர்ச்சிக்கு சாரதிகளுக்கு வழிகாட்டல்கள்

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்குச் சேவையாற்றும் வாகனச் சாரதிகளுக்கான விசேட கருத்தமர்வு அண்மையில் இடம்பெற்றது. வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தமர்வு இடம்பெற்றது.

யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நிகழ்வில் பங்கேற்று, சாரதிகள் பின்பற்றவேண்டிய அவசியமான நடைமுறைகள் மற்றும் ஒழுங்குகள் தொடர்பில் கருத்துரைகளை வழங்கினார். தெல்லிப்பழை பிரதேசத்துக்குட்பட்ட வாகனச்சாரதிகள், போக்குவரத்துப் பொலிஸார், சுகாதாரத் துறையினர் மற்றும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புபட்டுள்ள பல்வேறு நிபுணர்களும் வழிகாட்டுதல்களை வழங்கினர்.

செயலமர்வில் பங்குபற்றிய சாரதிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளும் வகையிலான ஸ்ரிக்கர்கள் வழங்கப்பட்டன. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சின்ஹொஹ் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரும் அவரது குழுவினரும் நேற்று மன்னாருக்குச் சென்றிருந்தனர். சீன மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த தலா 7 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளை 50 குடும்பங்களுக்கு அவர்கள் வழங்கினர். வங்காலையில் நடந்த இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சீனத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சீனா அரசும், அந்த நாட்டு மக்களும் உங்களுடன் இருப்பார்கள். வடக்கு மாகாணத்துக்கு 150 மில்லியன் டொலர் வழங்குவதற்கு ஏற்கனவே உறுதி வழங்கியுள்ளோம். அதில் ஒருபகுதி மீன்பிடி உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், ஒரு பகுதி உலர் உணவுப் பொதிகள் வழங்கவும், மிகுதி வீட்டுத் திட்டங்களை அமைக்கவும் பயன்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டங்கள் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு சர்வதேசமே உதவி செய்யவேண்டும். சீன முதலீட்டாளர்களையும், சீன உல்லாசப் பயணிகளையும் இங்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றோம். சினொபெக் என்ற பிரபலமான நிறுவனம் இலங்கையெங்கும் திறக்கப்பட்டு, மன்னாரிலும் கூட அது இயங்குகின்றது. இந்த நிறுவனம் உலகளவில் இரண்டாவது இடத்தில் இருக்கும் நிறுவனமாகும். எரிபொருளை வடிகட்டுவதில் முதலிடத்தில் இருக்கின்றது. இந்த நிறுவனத்தை அம்பாந்தோட்டையில் அமைப்பதற்கு அரசாங்கத்துடன் பேச்சுகள் நடக்கின்றன. அது வெற்றியளிக்குமானால் பல கோடி டொலரை இங்கு முதலீடு செய்ய அந்த நிறுவனம் தயாராக இருக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கையின் பல துறைகளை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பும், பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

இலங்கை ஜனாதிபதி சீனாவுக்கு வந்தபோது ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டுள்ளார். அந்த ஒப்பந்தத்தின் மூலம் கடல் உணவுகளை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தையும் சீனா இணையத்துடன் இணைத்து உதவி செய்யவுள்ளோம். மக்களின் பிரச்சினைகளின் உண்மைத்தன்மையைக் கண்டறியும்போது நிச்சயம் அதைத் தீர்ப்பதற்கு நாம் முயற்சிப்போம் - என்றார். (அ-எ-60)

## இந்தியாவுக்குப்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்கு தலையையும், சீனாவுக்கு வாலையும் காட்டும் வெளிவிவகாரக் கொள்கையை அரசு உடன் மாற்ற வேண்டும். இந்திய நிதி அமைச்சர் இலங்கை வந்த பின்னர் உடனடியாக சீனத்தூதுவர் வடக்குப் பகுதிக்குச் சென்று நிவாரணங்களை வழங்குகின்றார். வடக்கு - கிழக்குப் பகுதியில் இந்தியா எதையும் செய்யவிடக்கூடாது என்பதற்காக சீனா இவ்வாறு செய்கின்றதா? அல்லது இந்த நாட்டின் அபிவிருத்தியை முடக்குவதற்கு சீனா முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது இந்தியாதான் 4 பில்லியன் டொலரை வழங்கி உதவியது. இந்தியாவை பகைத்துக்கொள்ளும் வகையில் இந்தியாவுக்கு தலையையும், சீனாவுக்கு வாலையும் காட்டும் வகையில் வெளிவிவகாரக் கொள்கை இருக்கக்கூடாது.

ஒன்று இந்தியாவுடன் விசுவாசமாக இருக்கவேண்டும், இல்லையேல் சீனாவுடன் விசுவாசமாக இருக்க வேண்டும். அண்மை நாடு எது என்பதிலும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அதற்கேற்ற வகையில் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம்வரவேண்டும் - என்றார். (அ-எ-44)

## சட்டவரைவுகள்...

சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு மற்றும் ஊழல் எதிர்ப்பு (திருத்தச்) சட்ட வரைவு ஆகியன விவாதம் இன்றி திருத்தங்கள் இன்றி நேற்று நிறைவேற்றப்பட்டன.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்ட வரைவு தொடர்பில் நேற்று நடைபெற்ற இரண்டாம் மதிப்பீட்டு விவாதம் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-எ-44)

## ஆடுகளத்துக்கு...

அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இது தொடர்பில் தனக்கு நெருக்கமானவர்களுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தியுள்ளார் எனவும், பாதீட்டு கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அவர் இந்த முடிவை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிலங்கா கிரிக்கெட் சபை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும், விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. தனது அமைச்சுப் பதவியை பறித்தால் கூட முடிவை மாற்றப்போவதில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

கிரிக்கெட் விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டு ரொஷான் ரணசிங்கவை அமைச்சரவையில்இருந்துநீக்கினாலோ அல்லது பதவி மாற்றம் செய்தாலோ அது அரசுக்குப் பின்னடைவாக அமையும் என ஜனாதிபதி தரப்பு கருதுகின்றது. இதனால் 'உள்ளக' ரீதியிலான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு திட்டமிடப்படுகின்றது. அவ்வாறு அழுத்தங்கள் வரும் பட்சத்தில் அரசில் இருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் முடிவை அமைச்சர் ரொஷான் ரணசிங்க எடுக்கக்கூடும் என்று தெரிகின்றது. (அ-எ-44)

## ஆள்களற்ற...

செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் இவ்வாறு திருடப்பட்ட 18 பவுண் நகைகள் தொடர்பில் முறையிடப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் திருநெல்வேலியைச் சேர்ந்த 22 வயதான பிரதான சந்தேகநபர், திருட்டு நகைகளை வாங்கி உருக்கிய குற்றச்சாட்டில் ஒருவர், அவருக்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தில் பெண்ணொருவர் என 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருடப்பட்ட நகைகளில் 10 பவுண் மீட்கப்பட்டுள்ளது என்றும், மன்னார் மற்றும் திருகோணமலையில் அடகு வைக்கப்பட்டுள்ள மேலும் ஒரு தொகுதி நகைகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-ஒ-26)

## 3 நாள்களாக...

இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இரு தரப்பும் மூன்று தினங்களாக சச்சரவுகளில் ஈடுபட்டு வந்துள்ளன. ஒரு தரப்பின் மீது மற்றொரு தரப்பு கல் எறிவது, வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவது போன்ற சம்பவங்கள் தொடர்ந்த நிலையில் கோப்பாய் பொலிஸார் நேற்று 3 பெண்கள் உட்பட 23 பேரைக் கைது செய்தனர். ஒரு குழுவைச் சேர்ந்த 12 பேரும், மற்றொரு குழுவைச் சேர்ந்த 11 பேரும் கைது செய்யப்பட்டவர்கள். அவர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது நீதிவான் ஏ.ஆனந்தராஜா சந்தேகநபர்களை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ-எ-26)

## செய்வினை...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பணம் படைத்தவர்களை - குறிப்பாக பெரும் வர்த்தகர்களை - இலக்கு வைத்தே இந்த மோசடிகள் நடக்கின்றன என்று தெரியவருகின்றது.

தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் ஒருவர் தன்னை ஒரு மாந்திரீகர் என்று அறிமுகப்படுத்திக் கொள்வார். 'எனது ஞான திருஷ்டியால் உங்களது தொலைபேசி இலக்கத்தை அறிந்துகொண்டேன். உங்களுக்குப் பெரும் ஆபத்து நேர இருக்கின்றது, உங்களுக்கு சூனியம் வைக்கப்பட்டிருக்கின்றது 'என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்து விடுவார்.

அதன்பின்னர் இவ்வாறான தொலைபேசி அழைப்புகள் தொடரும். அழைப்பில் பேசுபவர் உங்களுக்கு அந்தப் பிரச்சினை இருக்கின்றது, இந்தப் பிரச்சினை இருக்கின்றது, செய்வினை சூனியம்தான் காரணம் என்று கூறக் கூற ஒரு கட்டத்தில் இவர்களும் தங்களுக்கு சூனியம் வைக்கப்பட்டிருக்கின்றது என்று நம்பியிருக்கின்றனர். அதன்பின்னர் 'நான் நேரில் வருகின்றேன், செய்வினையை வெட்டலாம்' என்று நம்பிக்கையளித்துசெய்வினை வெட்டுவதற்காக ஒரு தொகைப் பணத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டிருக்கின்றார். அதன்பின்னர் மாந்திரீகர் மாயமாகிவிட, அவர் நேரில் வருவார் என்று காத்திருந்து ஏமாந்து போயிருக்கின்றனர் இங்குள்ள பலர்.

இவ்வாறு பணத்தைப் பறிகொடுத்தவர்கள் அது தொடர்பாக முறைப்பாடும் செய்ய முடியாத நிலையில் தற்போது கையைப் பிசைந்துகொண்டுள்ளனர். பணத்தைப் பறிகொடுத்தபின்னர் பதறுவதை விடவும், இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகள் தொடர்பில் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று பொலிஸ் அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர். (அ-எ-26)

## கூட்டுப்...

எதிர்க்கட்சி ஆகியன ஒன்றிணைந்து கொண்டுவரும் பிரேரணை மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார். விவாதம் தொடர்பான பிரேரணை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்படவுள்ளதுடன், அது ஆளும் கட்சியால் ஆமோதிக்கப்படவுள்ளது.

இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் 2023 ஆம் நிதியாண்டுக்கான 231.5 பில்லியன் ரூபா அனுமதியைப் பெறுவதற்கான 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடு என்பன விவாதம் இன்றி அனுமதிக்கப்படவுள்ளன.

இன்று ஒதுக்கப்பட்டிருந்த வாய்மூல விடைக்கான கேள்விகள் பிறிதொரு நாளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று முற்பகல் 09.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை "ஊழல் மிக்க சிறிலங்கா கிரிக்கட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்" எனும் தலைப்பிலான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளதாகவும் மாலை 5.30 மணிக்கு குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம்பெறும் எனவும் பதில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ-எ-44)

## தபால்...

கள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நுவரெலியாவில் உள்ள பழமையான தபால் நிலையத்தை இந்தியாவின் தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு கைமாற்றுவதற்கு அராசாங்கம் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராகவே இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் போராட்ட அறிவிப்பின் பின்னர் நேற்றுமுன்தினம் தபால் திணைக்கள ஊழியர்கள் அனைவரதும் விடுமுறைகள் தபால் மா அதிபரால் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இருந்தபோதும் நேற்று நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பின்னணியிலேயே தபால் சேவை அத்தியாவசிய சேவையாக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

'இந்தப் பணிப்புறக்கணிப்பு அடிப்படையற்றது. தபால் திணைக்களம் நட்டத்தில் சேவைகளை வழங்குகின்றது. தனியார்மயப்படுத்தப்படாமல் வினைத்திறனான சேவையை வழங்குவதற்கு வருவாயை அதிகரிப்பதற்கு மாற்று வழிகளை மேற்கொள்ள வேண்டும்' என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் ஊக்குவிப்பு



யாழ்ப்பாணம், நவ.9

இணுவில் இந்துக் கல்லூரி மற்றும் இணுவில் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்விகற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கு பிரிட்டன் இணுவில் ஒன்றியக் கிளையால் ஊக்குவிப்புத் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அறிவாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற முழுநிலாக் கலையரங்கு நிகழ்வில் இணுவில் அறிவாலய உபசெயலாளர் கணபதி சர்வானந்தா ஊக்குவிப்புத் தொகைக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை உதயமோகன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இளையதம்பி துரைசிங்கம் ஆகியோர் காசோலைகளை பெற்றுக்கொண்டனர். (ச-66)

கடற்கொள்ளையரால் தாக்கப்பட்டு

# தமிழக மீனவர்கள் நால்வர் காயம்

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் நால்வர், மர்ம நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் நிலையில், இலங்கைக் கடற்கொள்ளையர்களே அவர்களைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு தமிழ்நாடு, புதுப்பேட்டைக் கிராமத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் நாகை மாவட்டம் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே தாக்குதலுக்கு இலக்காகினர் என்று கூறப்படுகின்றது.

படகில் வந்த மூவர் அவர்களைத் தாக்கி கத்திமுனையில் மிரட்டி அவர்களிடம் இருந்த மீன்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் இரு மீனவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அவர்கள் தமிழ்நாடு வேதாரண்டம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-100)


## பாவித்த கட்டுமான உபகரணங்கள் விற்பனைக்கு

இடம் : வவுனியா

பொருட்கள் : Shutter board, Concrete Mixture, GI Pipes, Scaffolding Set, Timber Planks, Column box, Tamping Rammer, Block machine.

CS 25818 (AK.1)

தொடர்பு : 074 358 4434



## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் இருந்து 100 m இல் 8 பரப்பு காணி விற்பனைக்குள்ளது.

4 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பிற்கு சிறந்த காணி பதிவுகளுக்கு முந்துங்கள்

1 பரப்பு 60 லட்சம்

தொடர்பு : 077 411 8851



## காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 3866 250

(CR 40940) A-1



## தவறவிடப்பட்டுள்ளது

ஒருதொகைப்பணம் NSB Bank இல் இருந்து நாவலர் ரோட்டிற்கும் மனோகரா சந்தி K.K.S. ரோட்டிற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 851 8683



## ICT ஆசிரியர் தேவை

யாழ்.நல்லூர் பகுதியில் O/L கற்கும் ஒருவருக்கு ICT பாடம் வீடுவந்து கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

தொடர்புகளுக்கு:- 075 2292 107



## பனம் பழம் தேவை

30 ரூபா வீதம் பனம்பழம் உங்கள் இடங்களுக்கு வந்து கொள்வனவு செய்யப்படும். சேகரித்து தரக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: 0777 111 999



## காணி விற்பனைக்கு / குத்தகைக்கு

A-9 வீதி, சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், திருமண மண்டபம் போன்றவை அமைக்கக் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

T.P: 077 6231 025



## தரமான காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை

1 பரப்பின் விலை 24 லட்சம்

தொடர்பு: 077 623 4204, 076 755 8606

(CS 26826) A-1



## மரண அறிவித்தல்

### வேலாயுதர் சுப்பிரமணியம்



தோற்றம் 12.02.1932 — மறைவு 08.11.2023

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (08.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 911 6120

(CS 26887)A-1



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 - 09 - 1950



விண்ணில் 09 - 11 - 2021

### லயன் சின்னத்தம்பி செல்வநாயகம்

உடல் வருத்தம் பாராத உண்மை
உழைப்பின் உதாரணம் நீங்கள்...!
ஆண்டவன் அடியில் நீங்கள் இருந்தாலும்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவில் நாங்கள் ...!

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

077 909 1097




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.